# பரலோக பொக்கிஷங்கள்



*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## தம் ஜனத்திற்கு, கர்த்தரே சூழ்நிலைகளை உருவாக்குகிறார்!

இந்த சூழ்நிலையை உருவாக்கியது யார்? என்ற கேள்விக்கு "... யாருமல்ல, அவரே அதை உருவாக்கினார்!" என உரைத்திடும் மாந்தர்களே, தேவனுடைய சொந்த ஜனங்கள்! அவரே முன்னின்று நடத்தும் மேய்ச்சலின் ஆடுகள்! தாங்கள் பெற்ற பாத்திரம் "பிதா எனக்குத் தந்த பாத்திரம்"என ஏற்று, மேய்ப்பனை பின் செல்பவர்கள்! நாள்தோறும் தொழுவத்தின் வாசலை மேய்ப்பன் திறந்ததும், அவர் நடத்திடும் பாதை எதுவாயிருந்தாலும் "அவர் திறந்த வாசலில் துதியோடும், அவரது பிரகாரங் களில் புகழ்ச்சியோடும் பிரவேசிப்பார்கள்!" அவர்களுக்கு கர்த்தர் என்றென்றைக்கும் நல்லவராயும், இரக்கம் செய்பவராயும் இருப்பார்! ஏனெனில், சூழ்நிலையைக் குறித்த முறுமுறுப்பும், குறைசொல்லும் அவர்கள் நாவில் இருப்பதில்லை! (சங்கீதம் 100:3-5). *-tr*

பெட்டகம் 22 செப்டம்பர் 2020 பரல்கள் 9



## உங்கள் ‘தொழுகையில்’ தேவன் ஒருவர் மாத்திரமே இருப்பாராக!

இயேசுவுக்கு ஒரு கூடாரம்! மோசேக்கு ஒரு கூடாரம்! எலியாவுக்கு ஒரு கூடாரம்! என மனுஷனுக்குரிய யோசனையின்படி, சீஷர்கள் கவரப்பட்டார்கள்! (மத்.17:4). எவ்வள பெரிய தேவ மனிதனானாலும், தேவனுக்கு ஆசரிப்பு கூடார தொழுகையைப்போல், அவர்களுக்கும் ‘கூடார தொழுகை’ வைப்பது நலமானதல்ல!! மனுஷர் ஆராதனையை தேவன் அருவருக்கிறார்!! எந்த உத்தம தேவ தாசர்களும் அருவருப்பார்கள்.... அதை ஏற்க மறுத்து ஓடுவார்கள்!! மேகம் நிழலிட, அந்த மேகத்தில் அவர்கள் இருவரும் (மோசேயும், எலியாவும்) சீக்கிரத்தில் மறைந்து கொண்டார்கள்!! தனக்கு “கிரீடம்” தரவந்த மக்களிடமிருந்து இயேசு ஒளித்துக் கொண்ட மாதிரியை, தாழ்மையான தெய்வதாசர்கள் யாவரும் கடைபிடிப்பார்கள்! இந்த உத்தம தேவ தாசர்கள் பத்திரமாய் தான் உள்ளனர்.... ஆனால் இந்த ‘மனுஷருக்கேற்றப்படி’ சிந்திக்கும் சீஷர்களை நாம் என்னவென்று சொல்வது?

**இன்று முதல் “இன்னாரைப் பிரியப்படுத்த வேண்டும்!” என, எத்தனை கூடாரங்கள் உள்ளதோ, அவை அத்தனையையும் அடியோடு கவிழ்த்துப் போடுங்கள்.**

உங்கள் இருதயத்தில் தேவன் ஒருவர்தவிர..... அவர் ஒருவரைப் பிரியப்படுத்துவது தவிர, வேறு யாரும் அங்கு வாசமாய் இருந்திடாதிருக்க கவனம் கொள்ளுங்கள்! அந்த சுத்த இருதயத்தில் அல்லது அந்த ஆசரிப்பு கூடாரத்தில் தேவன் மாத்திரமே வாசம் செய்வாராக! அவர் ஒருவரை மாத்திரமே தரிசித்து ஆராதனை செய்யுங்கள்!! இவர்களே, பாக்கிய வான்கள்!! (மத்.5:8).

*-Ed*

‘பரலோக பொக்கிஷங்கள்’ வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com
You Tube : paralogapokkishangal, CFCMadurai

## கிறிஸ்துவுக்குள் 'பயமின்றி' வாழுங்கள்!

*நீண்டநாட்களாய் 'வியாதிப்பட்டிருந்த ஒரு பாஸ்டரை' நான் ஒரு சமயம் சந்தித்தேன். அவரோ, அந்த வியாதியைத் தனக்கு விரோதமானவர்கள்* "**செய்வினை மூலமாய்**" *தன்மீது ஏவி விட்டதாகக் கூறினார். இது எப்படி சம்பவிக்க முடியும்? நம் ஆண்டவர் என்ன, மந்திரவாதத்தை விட வல்லமை குறைந்தவரா? பில்லிசூனியத்தின் வல்லமையைக் காட்டிலும் குறைவான வல்லமையைக் கொண்டவரா? ஒருக்காலும் இல்லை! பின் எப்படி அந்த பாஸ்டர் அவ்விதமாய் கூறினார்? ஆம், முழுக்க முழுக்க* **அந்த பாஸ்டரின் அவிசுவாசமே** *அதற்கு காரணமாகும்.*

*பிசாசுகள் கிரியை நடப்பிக்கும் பூமியானாலும் அல்லது வானமண்டலங்களானாலும் (எபே.6:12), நம் ஆண்டவருடைய வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் விரோதமாய் எந்தப் பிசாசின் வல்லமையும் நின்றிட முடியவே முடியாது! இதை உங்களால் விசுவாசிக்க முடியவில்லையென்றால், நீங்கள் ஆண்டவருக்கு ஊழியம் செய்வதை நிறுத்திவிட்டு, எங்காவது சென்று, வேறு எதையாவது செய்யும்படிக்கே நான் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். ஆம், ஒரு பிரசங்கியாய் இருப்பதை நிறுத்தி விடுங்கள்! இல்லையென்றால், உங்களிடமுள்ள பயத்தையும் அவிசுவாசத்தையுமே நீங்கள் மற்றவர்களுக்கும் பரவிடச் செய்வீர்கள்!*

> **பயம், சாத்தானின் ஓர் வல்ல ஆயுதம்... அதை அவன் உங்கள்மீது பயன்படுத்த ஒருக்காலும் விட்டு விடாதீர்கள்!**

*யோபுவுக்கு நடந்தது போலவே, ஒரு விசுவாசிக்கும் பிசாசுகள் துன்பம் விளைவித்திட தேவன் சில சமயங்களில்* **அனுமதித்து** *சம்பவிக்கலாம். அப்போஸ்தலனாகிய பவுலைக்கூட "சாத்தானுடைய ஒரு தூதன்" துன்புறுத்தும்படி தேவன் அனுமதித்திருந்தார் (2கொரி.12:7). அந்த துன்பம், அவருடைய சரீரத்தில் ஓர் முள் குத்தியதைப் போன்ற கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அது ஒருவேளை, ஒரு வியாதியாகவோ அல்லது பவுல் எங்கு சென்றாலும் தொந்தரவு செய்த ஒரு நபராகவோ இருந்திருக்கலாம். நம்முடைய சரீரத்திலும் ஓர் முள் குத்தி அதை*

நாமாகப் பிடுங்கமுடியாத பட்சத்தில், தேவன் அதைப் பிடுங்கும்படி கேட்பது சரிதான். ஆனால் தேவன் பவுலுக்கு கூறியது போலவே, சில சமயங்களில் அந்த முள்ளைப் பிடுங்கி எறிய "இல்லை" என மறுத்து விடுவார். அதுஏனென்றால், நம்மைத் **தாழ்மையில்** தொடர்ச்சியாய் பாதுகாத்திருக்க அந்த முள் மேலான கிரியை செய்கிறது என்பதை தேவன் கண்டதினிமித்தமேயாகும். ஒரு சமயம், ஊழியத்திற்காக தெசலோனிக்கேயா பட்டணத்திற்கு பவுல் செல்ல வேண்டியிருந் ததைக் கூட சாத்தான் தடை செய்தான். ஆனால் அவனுக்குப் பதிலாக, அந்த இடத்திற்கு தீமோத்தேயு சென்று தேவனுடைய நோக்கம் நிறைவேறி முடிந்ததைப் பாருங்கள்! (1தெச.2:18; 3:2).

இந்த சத்தியத்தை நான் இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்பு கிறேன்! மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவன், பிசாசினால் பிடிக்கப்பட ஒருபோதும் முடியவே முடியாது! ஆனால் துரதிருஷ்ட வசமாய், அநேக பிரசங்கிகள் வேதவசனத்தில் இல்லாத உபதேசங்களை இந்நாட்களில் பிரசங்கிக்கிறார்கள். அதன் விளைவாய் "**விசுவாசி களையும் பிசாசு ஆட்கொள்ளும்**" எனப் பிரசங்கித்து, அநேக விசுவாசி களைப் பயத்திற்கும், குற்ற உணர்வுக்கும் கொண்டு வருகின்றார்கள்!

> **இதுபோன்ற பிரசங்கிகள், தங்கள் போதகத்திற்கு ஆதாரமாய் வேதத்திலிருந்து ஒரு வசனத்தைக்கூட காட்டிட முடியாது! ஆனால் அதற்குப் பதிலாக 'தங்கள் சொந்த அனுபவத்தில்' இதுபோன்ற நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததாகக் கூறுவார்கள். இவ்விதமாய், இவர்கள் தங்கள் அனுபவத்தை தேவனுடைய வார்த்தைக்கு மேலாய் உயர்த்துகிறார்கள்! தங்கள் அனுபவத்தை ஆதாரமாகக் காட்டும் இந்தச் செயலே, அவர்கள் செய்வது தவறு என்பதை நிரூபித்துக்காட்டுகிறது!**

கிறிஸ்துவும் அவரோடு சேர்ந்து ஒரு பிசாசும் "ஒரே இருதயத்தில்" சேர்ந்து தங்கியிருக்க ஒருக்காலும் முடியாது. ஒளியும் இருளும் ஒரே ஸ்தலத்தில் சேர்ந்திருப்பதில்லையே! இயேசு பிரசங்கித்த ஆலயத்தி லிருந்த யூதர்களில் சிலரோ, பிசாசு பிடித்தவர்களாயிருந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்திற்குப் பின், "மறுபடியும் பிறந்த விசுவாசிகளில்" ஒருவராவது பிசாசு பிடித்தவர் களாய் இருந்ததாக நாம் காணவே முடியாது.

ஒரு கிறிஸ்தவன், 'வெளிப்புறத்திலிருந்து' பிசாசுகளினால் துன்புறுத்தப்படலாம். பவுலுக்கும், யோபுவுக்கும் இவ்வாறே சம்பவித்தது. அதுவும்கூட தேவனுடைய அனுமதியில்தான் நடந்தது!

> **இவ்வாறு தேவன் அனுமதிக்கும் ஓர் துன்பமாய் இருந்தால் *யோபுவுக்கும், பவுலுக்கும்* நடந்ததைப்போல அத்துன்பங்கள் உங்கள் ஆவிக்குரிய**

**நன்மைக்காகவே கிரியை நடப்பிக்கும் என்பதில் பூரண நிச்சயமுள்ளவர்களாக இருக்கலாம்!**

*சிலரைக் குறித்து, அவர்கள் பிசாசினால் பிடிக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது இல்லையா? என்கிற சந்தேகம் உங்களுக்கு எழும்புமானால், அவர்கள் தங்கள் மனப்பூர்வமாய் கீழ்காணும் மூன்று அறிக்கைகளைச் சொல்லும்படி கேளுங்கள் :*

1) இயேசுகிறிஸ்துவே என் ஆண்டவர்!

2) இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வந்து பாவத்தை ஜெயித்தார்!

3)ஆண்டவர் இயேசுகிறிஸ்துவினால் சிலுவையில் சாத்தான் தோற்கடிக்கப்பட்டான்!

*இந்த மூன்று அறிக்கைகளையும் பிசாசு பிடித்த ஜனங்கள் தங்கள் ஆவியில் அறிக்கை செய்திட அவர்களால் ஒருக்காலும் முடியாது!*

*நாம் எப்போதெல்லாம் வியாதிப்படுகிறோமோ, அப்போதெல்லாம் நாம் சுகமடையும்படி ஜெபிக்கவேண்டும். ஆனால் அதேசமயம் நாம் ஆண்டவரைப் பார்த்து "ஆண்டவரே இந்த வியாதியின் மூலமாய் சிறந்த ஆவிக்குரிய நன்மைகளைத் தந்திட நீர் திட்டமிட்டு அதன்மூலம் உம்முடைய நாமத்தை நீர் மகிமைப்படுத்தத் தீர்மானித்திருந்தால், இந்த வியாதியை நான் பணிவுடன் ஏற்றுக் கொள்கிறேன்" என்றும் கூறிட நாம் தயங்கிடக்கூடாது.*

*பழைய உடன்படிக்கையின் கீழ், யாரெல்லாம் தங்கள் பெற்றோர்களைக் கனம் செய்து வாழ்ந்தார்களோ அவர்களுக்கு ஆரோக்கியமான நீடிய ஆயுளைத் தருவதாக தேவன் வாக்குதத்தம் செய்திருந்தார். இந்த வாக்குதத்தத்தில் அடங்கியுள்ள மேன்மை என்னவென்றால், பெற்றோருக்கு கனம் செய்யும் பிள்ளைகள் "வளர்ந்து வரும்போது" தேவன் அவர்களை கவனித்துக் கண்காணிப்பார்! அவர்களுக்கு எந்த மரணத்திற்கேதுவான விபத்தோ அல்லது வியாதியோ வராமலும் பாதுகாப்பார்! இவ்வாறு தங்கள் பெற்றோர்களைக் கனம் செய்யும் பிள்ளைகளைத் தேவன் "விசேஷமாய் கண்காணித்து" காக்கிறாரா? ஆம் .... அது உண்மைதான்!*

*தன் பெற்றோர்களைக் கனம் செய்து வாழும் பிள்ளைகளுக்கு சம்பவிக்கும் எல்லா சூழ்நிலைகளையும் தேவனே ஆளுகை செய்து, அவர்களை இப்பூமியில் நீடிய ஆயுசுடன் வாழச்செய்து, தன் வாக்குத்தத்தத்தை இன்றும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்!*

**'இதேபோலவே' நம்முடைய வாழ்வின் சூழ்நிலைகளையும் தேவன் ஆளுகை செய்து, நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்பே மரிக்காதிருக்கும்படி செய்கிறார்! இவ்வாறு நாம் தேவனுடைய**

**சித்தத்தை நிறைவேற்றுவது இயேசுவைப்போல் 33வது வயதோ அல்லது 90வது வயதோ இருக்கலாம். ஆனால், அதற்கு முன்பு நாம் ஒருக்காலும் மரித்திட மாட்டோம்!**

இருப்பினும், புதிய உடன்படிக்கையின் கீழோ "நீடிய ஆயுசு" ஒரு விசேஷித்த காரியம் இல்லை என்பதையும், தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்காக செலவிடப்பட்ட வாழ்க்கையே மேலானது என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். அந்த வாழ்க்கை குறைந்த ஆயுசா? அல்லது நீண்ட ஆயுசா? என்பது ஒரு பொருட்டல்ல! இயேசுவேகூட 33 வயது வரை மாத்திரமே ஜீவித்தார்.... **ஆனால், அந்த வயதில் தன் பிதா தந்த பணியை அவர் செய்து முடித்துவிட்டார்!**

டேவிட் ப்ரெய்னார்டு என்ற பக்தன் 29 வயது வரைதான் வாழ்ந்தார். ஆனால் வாட்ச்மேன் நீ என்ற பக்தனோ 70 வயது வரை வாழ்ந்தார்! நாம் அறிந்திருக்கிறபடி, இவர்கள் இருவருடைய வாழ்க்கையிலும் சம்பவித்த முக்கியமான காரியம் யாதெனில், இந்த பூமியைவிட்டு இவர்கள் போவதற்கு முன்பாகத் **தேவன் அவர்களுக் கென்று தந்த பணிகளைச் செய்து முடித்தார்கள்!** அவர்களுடைய பணி இந்த பூமியில் செய்யப்படும்வரை, எந்த வியாதியும் அல்லது விபத்தும் அந்த குறிப்பிட்ட ஆயுசை குறைத்து விடாதபடி, அவர்களின் சகல சூழ்நிலைகளையும் தேவன் தன் சர்வ வல்லமையினால் ஆண்டு நடத்தினார்!!

இந்த பூமியில் நம்முடைய சரீரத்தைத் தாக்கும்படியான ஏராளமான கிருமிகளும், பாக்டீரியாக்களும் இருக்கின்றன. சில கிருமிகள், நம்மைக் கொல்லும் அளவிற்கு அசூர வலிமை கொண்டதாயும் இருக்கின்றன. அவைகள் நம்மைக் கொன்றுவிடாதபடி "**அந்தக் கிருமிகளை ஆளுகை செய்வதற்கும்**" தேவன் போதுமான வல்லமை கொண்டவராகவே இருக்கிறார்!

சாலைகளில் நாம் செல்லும்போது, லாரிகளோ அல்லது எந்த வாகனங்களோ நம்மீது ஏறி நசுக்கிக் கொன்றுவிடாதபடி, அதை ஓட்டி வந்த "**குடிகார டிரைவர்களையும் ஆளுகை செய்திட**" தேவன் போதுமான வல்லமை கொண்டவராகவேயிருக்கிறார்!!

ஆம், ஒவ்வொரு இமைப்பொழுதும் தேவன் நம்மைப் பாதுகாக்கிறார்! அவ்வித பாதுகாப்பில் அவர் தூங்குவதுமில்லை, கண் அயர்வதுமில்லை! இதை நாம் **மெய்யாகவே விசுவாசிப்போமென்றால்,** சூழ்நிலைகளின் பயத்திலிருந்தும், வியாதிகளின் பயத்திலிருந்தும், விபத்துக்களின் பயத்திலிருந்தும் அல்லது இதுபோன்ற வேறு பல பயத்திலிருந்தும் நாம் முற்றிலும் விடுதலையாகியிருப்போம்!

*நீங்கள் தேவனுக்குப் பயந்திருந்தால், மெய்யாகவே வேறு எதற்கும் நீங்கள் பயந்திடத் தேவையே இல்லை! அல்லேலூயா!*

---

## எளியோர்க்கு அளித்த 'ஈகை ஊழியத்தை' ஆசீர்வதித்த கர்த்தர்!

**எனக்கு தேவன் தந்த அழைப்பின்** *பயணத்தை நான் ஆரம்பிப்பதற்கு முன்பாக மாரிகாலம் தொடங்கியது! பல வருடங்களுக்குப் பின்பாக, இந்த மாரிகாலம் மிக வலுவாய், இடைவிடாத மழையாய் பெய்து கொண்டிருந்தது. இந்த கொடிய மாரி காலம் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்த நிலையில், எளிய மக்களிடத்தில் பஞ்சம் நிலவியது. இந்த தருணத்தை* **'நற்கொடை பணிக்கு'** *சாதகமாக நான் கருதினேன். அவ்வாறு, நான் முன்புபோல் ஏழை ஜனங்களுக்கு உதவி தந்திட, பெட்டிகளைத் தயார் செய்து வைத்தேன். பொருளாதார-தாழ்ச்சி கொண்ட ஓர் பெரிய வீதியில் 'ரொட்டி பொட்டலங்களை' நான் சென்று வழங்கினேன். இவ்வாறு அந்த வீதியிலுள்ள தேவையான ஜனங்களுக்கு, ஒரு வாரத்திற்கு சுமார் 1152 ரொட்டி பொட்டலங்கள் வழங்கினேன்.*

**'அன்று'** *என்னுடைய மாமியாருக்கு, என் கணவரோடிருந்த நாள் தொடங்கி, அவர் மரிக்கும் வரை, நான் எளிய ஜனங்களுக்கு தாராளமாய் உதவி செய்வதை என் மாமியார் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நான் உதவி செய்யும் பெருந்தொகையான ஈவுகள் 'இளவரச பரம்பரைக்குரிய ஆஸ்தியாய் இருந்தபடியால்' என்னுடைய ஈகை செயலை அவர்களால் நிறுத்த முடியவில்லை. ஆத்திரமடைந்த என்னுடைய மாமியார் அன்று, என் கணவரிடம் சென்று...*

> *"மகனே நம்முடைய பணத்தையெல்லாம் இவள் வீணடிக்கப் போகிறாள். இவள் இப்படி வாரி வழங்குவது அதிக கொடுமை!" என கூறி என் கணவருடைய கோபத்தை தூண்டி விட்டார்கள்.*

*இவ்வித இடை யூறுகள் மத்தியில்தான் நான் எளிய ஜனங்களுக்கு அந்நாட்களில் ஊழியம் செய்து வந்தேன். என் மாமியார், என் கணவரைத் தொடர்ந்து தொந்தரவு செய்ததினிமித்தம், "நீ வீட்டிற்குச் செய்கின்ற செலவையும், தானதர்மத்திற்கு செய்கின்ற செலவையும் எழுதி, என்னிடம் கணக்கு ஒப்புவி" என கண்டிப்புடன் கட்டளையாய் கூறி விட்டார்.*

**இவ்வாறு நான் செய்வதன் மூலமாய், எளிய ஜனங்களுக்கு நான் கொடுக்கும் அளவை கோடிட்டு, என் கணவர் என்னை ஆக்கினைக்குட்படுத்த வேண்டும் என்ற என்னுடைய மாமியாரின் திட்டம் தெளிவாகவே இருந்தது!**

*எங்கள் 11வருடதிருமண வாழ்வில், பொருளாதாரத்தினிமித்தம் இப்படியொரு இக்கட்டான நெருக்கடியை நான் அனுபவித்ததே இல்லை. என் மனதில் ஏற்பட்ட ஒரே சஞ்சலமெல்லாம், நான் கொடுக்கும் கணக்கை வைத்து, எளிய ஜனங்களுக்கு நான் இந்நாள் வரை செய்து வரும் தான தர்ம ஊழியத்தை என் கணவர் நிறுத்தி விடுவாரோ? என்ற அச்சமேயாகும். ஆகிலும், என் கணவர் கூறியபடி கணக்குகளை கவனமாய் எழுதினேன். எளிய ஜனங்களுக்கு செய்ததான ஊழியத்தின் கணக்குகளையும் அப்படியே எழுதினேன். எந்த வேற்றுமையான எண்ணத்திற்கும் இடம் கொடாமல் 'தான தர்மத்திற்கு செய்த ஊழியத்தில், எவ்வளவு பெரிய பொருளாதாரத்தின் அளவையும் குறைக்காமல்' தூய மனசாட்சியோடு எழுதி முடித்தேன். நான் எழுதிய கணக்கு மிகத் துல்லியமாய், ஒரு ஆடிட் நிபுணர் எழுதி யதைப் போல் இருந்ததைக் கண்டு நானே ஆச்சரியமடைந்தேன். இதுவும் என் இரட்சகர் அருளின தயவு என உணர்ந்து, கர்த்தரைப் போற்றினேன்!*

*நான் எழுதிய கணக்கில் ஒரு பிழைகூட இல்லாதிருந்தது. அதில் சந்தேகமாய் எழும் எந்த கேள்விக்கும் சரியான பதில் என்னிடம் இருந்தது. அதுமாத்திரமல்ல, இவ்வாறு நான் கணக்கு எழுதின நேரத்தில் தான் 'நன்கொடையாளர்கள்' அநேகர் எங்கள் இளவரச நிறுவனத் திற்கு, தொண்டு செய்யும் பணிக்காக அதிகமான பணம் அனுப்பி இருந்தார்கள். நற்கொடை பணிக்கு, சிறிதுகூட குறைவில்லாமல் ஏராளமாய் கர்த்தர் வழங்கியிருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். இப்போது என் உள்ளத்தை பற்றிக்கொண்ட தெய்வ பயம் என்ன வென்றால், என்னுடைய இளவரச பொருளுதவி என்பதைவிட* **கர்த்தரே அந்த பொருளுதவியை 'நன்கொடையாளர்கள் மூலம்' நிலைத்திருக்க செய்திருக்கிறார் என்பதைக் கண்டு பேரானந்தம் கொண்டேன்.** *மிகுந்த நன்றியுடன் "ஓ என் கர்த்தாவே, இனி என்னுடைய இளவரச சேமிப்பு தொகை யாதொன்றும் என்னுடையதல்ல, அனைத்தும் உம்முடைய வைகள்! நீர் அருளிய இந்த கொடை பணத்தில் ஒரு ரூபாய் கூட வீணாய் கொடுக்கப் படவோ, செலவிடப் படவோ கூடாது! இந்த ஈகை ஊழியத்தை நீர் ஆசீர்வதித்து பூரணமாய் பெருக வைத்திருப்பதற்காக உமக்கு நன்றி! உம்முடைய சித்தப்படி, எளிய ஜனங்களுக்கு ஈகையாக கொடுக்கப் படும் பொருளாதாரத்தை நீர் குறைவின்றி ஆசீர்வதிப்பதைக் கண்டு, இந்த ஊழியத்தை நன்றியுடன் தொடர்கிறேன்!" என ஜெபித்தேன்!*

**இப்போதோ,** *சூழ்நிலை முற்றிலும் மாறிவிட்டது. ஒவ்வொரு வாரமும் 1152 ரொட்டி பொட்டலங்களை தினசரி எடுத்துச் சென்று*

நான் கொடுத்தபோது, என் மாமியார் "அன்பு மகளே, இந்த நற் கொடையாகிய புனித ஊழியத்திற்கு எனக்கும் சந்தர்ப்பம் தருவாயா?" என பணிவுடன் கேட்டது, என் உள்ளத்தில் அப்படியொரு பேரின்பமான அதிர்ச்சியை ஏற்படுத்தியது! மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்களையும் அழைத்துச் சென்று எளியவர்களின் பசி ஆற்றினோம்!

– மேடம் குயான்

---

## 'நெஞ்சில் ஒளி பெறாமல்' கிறிஸ்தவனும் இல்லை! சபையும் இல்லை!

ஒவ்வொரு மனிதனின் 'அந்தரங்க ஆழத்தில்' ஓர் அந்தரங்க 'தேவனின் வாசஸ்தலம்' உண்டு. அங்குதான் மனிதனின் 'உயிர்தன்மை' மறைந்திருக்கிறது. மனிதனுடைய எந்த உறுப்புகளின் முக்கியத் துவத்தைக் காட்டிலும், அவனுக்குள்ளிருக்கும் 'அந்த இரகசிய ஸ்தலமே' ஒப்பில்லாத ஒன்றாகும். தேவன் ஒருவரே "I AM- என்றும் இருக்கிறேன்" என்ற பொருளுடையவர். நம்மை சிருஷ்டித்த தெய்வம், அவருடைய I am-என்று இருக்கும் தன்மையை மனிதனுக்கு வரமாய் தந்தார்!

'மானிடன்' என்ற குறுகிய ஆழத்திற்குள் 'மனுஷனின் ஆவி' இருப்பதாகவே வேதம் கூறுகிறது (1கொரி.2:11). தேவனை முழுமை யாக நெருங்கி வாழும் அறிவோ, நித்திய ஆவியில் அடங்கியிருக்கிறது! அதுபோலவே, மனுஷனுடைய முழுமையான அறிவும், அவனுடைய சொந்த ஆவியில் அடங்கியிருக்கிறது. ஆகவே, தேவனைப் பற்றிய முழு அறிவையும் பெறுவதற்குரிய நேரடி ஒரே வழி, தேவனுடைய ஆவி மனுஷனுடைய ஆவியில் தன்னை பதிப்பதேயாகும்! தேவனைக் குறித்த இந்த மூல-சத்தியத்தின் முக்கியத்துவத்தை அறியாமல், நாம் தேவனைக் குறித்து யாதொன்றும் சிந்திக்க இயலாது!

**மனுக்குலத்தின் மிகப்பெரிய இழப்பு என்னவென்றால், அவன் தெய்வ ஸ்தலத்திலிருந்து வீழ்ச்சி அடைந்தவுடன், தேவனுடைய ஆவி, அவனிடம் தான் வைத்திருந்த ஸ்தலத்தை விட்டு வெளியேறி விட்டார்! என்பதேயாகும்.**

தேவனோ, மனிதனுக்குள் அவர் விரும்பிய மறைவான ஸ்தலத்தில் தங்கியிருக்கவும், ஆவிக்குரிய தெய்வ குணாதிசயத்தில் அவனுக்குள் அக்கினியாய் சுடர்விடவும் தீர்மானம் வைத்திருந்தார். மனுஷனோ, தன்னுடைய பாவத்தினிமித்தம் **'ஆச்சரியமான, இந்த விவரிக்க இயலாத சிலாக்கியத்தை' புறக்கணித்து** இன்று அவன் அந்த ஸ்தலத்தில் தனிமையில் இருக்கிறான்!

இப்போதோ, தேவ இரகசியத்தின் ஆச்சரியமான ஓர் மகத்துவ செயல்தான், இயேசு கூறிய "**மறு பிறப்பில்**" சம்பவிக்கிறது. பேதுரு இதை

*“திவ்விய சுபாவம்” என குறிப்பிட்டு, அது ஒவ்வொரு விசுவாசியின் இருதயத்தின் ஆழத்திற்குள் சென்று குடியிருக்க வேண்டும் என்ற, நமது அழைப்பை உணர்த்தினார்! இப்படி ஒரு தெய்வீக ஆரம்பம் ஒருவனுக்குள் நடந்திருந்தால் மாத்திரமே, அவன் உண்மை கிறிஸ்தவன்! இப்படி ஒரு ஆரம்பம் எனக்குள் நடக்கவில்லை என நீங்கள் கூறினால் “நீங்கள் உண்மை கிறிஸ்தவனல்ல!” என நான் கூறுவதற்கு எந்த தயக்கமும் இல்லை. சர்வ வல்ல தேவன், தனக்கு உண்டான யாவற்றையும், தன் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தந்திட முடியும். தனக்குரியதை எல்லோருக்கும் ‘கொஞ்சம் கொஞ்சம்’ அல்ல! தன் ஒவ்வொருவருக்கும், தன் முழுமையையும் தர விரும்புகிறார். அது எப்படியெனில், தன்னை முழுவதும் கொடுப்பதற்கு, வேறு ஒருவரும் இந்த பூமியில் இல்லாவிட்டாலும் ‘உங்கள் ஒருவருக்கே’ சகலத்தையும் கொடுத்து விடுவார்! என்பதுதான், அழியாத-மாறாத உண்மை!*

**இன்று ஏன் கிறிஸ்தவர்களிடத்திலும், கிறிஸ்தவ சபைகளிடத்திலும் ‘தேவனுடைய உயர்ந்த தரம்’ சரிந்து கிடக்கிறது? நாம் இதுவரை குறிப்பிட்ட “தேவனின் வாசஸ்தல-உள்ளான சாட்சியை” அவர்கள் புறக்கணித்ததே காரணமாகும்!**

*ஆதி கிறிஸ்தவர்களிடமிருந்த ஓர் விசேஷித்த அடையாளமாய் இருந்ததெல்லாம், அவர்கள் உள்ளான ஜீவியத்தில் ஒளி சுடர்விட்ட “தெய்வீக பிரகாசமே” யாகும்! அவர்களின் இருதயங்களில் சூரியனே (உலகத்தின் ஒளியே) வந்து உதித்து ‘வெளிச்சத்தையும் வெப்பத்தையும்’ தந்தபடியால், தெய்வ பிரசன்னத்திற்கு வேறு யாதொரு மூலதனங்களும் அவசியமில்லாதிருந்தது! சபையாய் கூடிவந்த அந்த கிறிஸ்தவர்களிடம் காணப்பட்ட* **“உள்ளான ஒளியின் சாட்சியே”** *போதுமானதாயிருந்தது. ஆனால், இன்றுள்ள கிறிஸ்தவ சபைகளை சற்று ஏறிட்டுப் பாருங்கள். “கிறிஸ்துவின் ஜீவ ஒளி” அங்கு இல்லை என்பது கண்கூடாகத் தோன்ற வில்லையா?* **தங்கள் சபை கூடுகையை நியாயப்படுத்தும் பாட்டு, ஜெபம், பிரசங்கம், காணிக்கை** *போன்றவை களையே வைத்துக்கொண்டு ‘கிறிஸ்துவின் பிரகாசத்தை இழந்து’ அந்த காரத்திற்குள் உழன்று கொண்டு, நாங்களும் சபை என கூறுகிறார்கள்!?*

*‘தங்களையே தீர்க்கதரிசிகளாக’ வைத்துக்கொண்டவர்கள்தான் இன்றைய பெரும்பாலான சபைகளில் இருக்கிறார்கள். சுற்றி அமர்ந்திருக்கும் ஜனங்களோ, கண் ஒளி இல்லாத மாந்தர்கள்! இவர்களுக்கு ‘ஏதோ ஒளி இருந்தால் போதும்’ எனக் கூறி, தேவனுடைய ‘பிரகாசமான ஒளியை’ புறக்கணிக்கிறார்கள். நாங்கள் கூடி வருகிறோம், ‘மார்க்க அனுபவத்தை’ பெற்றுக்கொள்கிறோம்.....*

**அதுபோதும்!** என்றே மாய்ந்திடும் எண்ணற்ற சபையோர்களைக் குறித்து பரிதபிக்காமல் நாம் என்ன செய்வது? 'ஏதோ அனுபவம் உள்ளது' என்பதற்கும் 'எங்கள் நடுவில் ஒருவர் இருக்கிறார்' என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? ஆதி கிறிஸ்தவ சபைகளில் கூடி வந்தவர்கள் "தங்களோடு வாசம் செய்த தெய்வத்தின் அதிசயத்தையே" நிறைவாய் பெற்றிருந்தார்கள்.

> **ஆதி சபையில், 'எங்கள் நடுவில் ஒரு பெரியவர் இருக்கிறார்' என்ற உணர்வு எல்லோரையும் பற்றிப் பிடித்துக் கொண்ட தெய்வீக உணர்வாய் இருந்தது. இந்த ஒரு ஆச்சரியம் தவிர, வேறு எது உங்கள் சபையில் இருந்தாலும், அது கிறிஸ்துவுக்கு வெளியே உள்ள குப்பைகள் என அறியுங்கள்!**
>
> – *A.W. டோசர்*

---

## ஊழிய பாதையில், நான் அனுபவித்த கர்த்தரின் உத்தமம்!

சென்னை இராயபுரம் சபையில் நான் நீண்ட காலமாயிருந்த படியால் இதை பரமானந்தம் ஐயர் கோயில் என்றே இன்னும் அழைக்கிறார்கள். நான் என்ன சொன்னாலும், ஆண்டவருடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாகவே சொல்லுகிறேன். நானோ அற்ப மனுஷனாயிருக்கிறேன். **'நான் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியை மறப்பவனல்ல'** (ஏசாயா.51:1).

கர்த்தருடைய ஊழிய அழைப்பினிமித்தம் நான் வேலையை விட்டு விலகினபோது, வசிப்பதற்கு உடனே வீடு இராயபுரத்தில் கிடைக்காததால், மண்ணடிக்குப்போய் மலையப்பன் தெருவிலுள்ள ஒரு வீட்டின் மாடியில் குடியிருந்தோம். 1952 ஜனவரியில் இராய புரத்தில், கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள வீடு கிடைத்தது. இது கர்த்தருடைய நடத்துதல். மெய்யாகவே 'தேவன் தனிமையான வர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்துகிறார்' (சங்.68:6). இந்த எட்டு வருஷ காலமாக இங்கேயே வசித்து வந்தோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! என் கடைசி மகன் பான்ஸ் பரமானந்தமும் மருமகள் எஸ்தரும் என்னோடிருந்தார்கள். மகன், பத்து வருஷகாலம் கார்ப்பரேஷன் கவுன்சிலராக இருந்து பொது ஜனங்களுக்காக இரவு பகல் உண்மையாய் உழைத்து வந்தான்! கவுன்சிலர்கள் செலவுக்காக மற்ற இடங்களில் மாத உபகாரம் கொடுக்கப்படுகிறது. சென்னை கார்ப்பரேஷனில் அது கொடுக்கப்படுவதில்லை. கவுன்சிலராயிருப்ப வர்கள் ஜனங்களிடமிருந்து வேண்டிய பணம் சம்பாதித்துக் கொள்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. மகனோ, ஜனங்களிட மிருந்து காலணா சம்பாதித்தவரல்ல. தன் கையிலுள்ளதையே செலவு

*செய்துகொண்டு மற்றவர்களுடைய நன்மைக்காக உழைத்தார்! நான் வேலையை ராஜினாமா செய்தபடியால், எனக்குப் பென்ஷன் கிடையாது. அப்படியானால் நாங்கள் பிழைப்பதெப்படி? இங்கேதான் தேவனுடைய மாறாத வாக்கும் கிருபையும் விளங்குகிறது. நான் எவ்வளவு குறைவுள்ளவனாயிருந்தபோதிலும் என் ஆண்டவருக்குச் செய்து வந்த ஊழியத்தில் மாயமாகவோ, வஞ்சகமாகவோ நடந்தவன் அல்ல. அவருடைய காரியத்தையே பிரதானமாகத் தேடினவன். எவ்வளவு கஷ்டங்கள் கவலைகள் என்னைச் சூழ்ந்திருந்தாலும் சோர்ந்து போகாமல் அவருடைய வேலையை உற்சாகமாகச் செய்து வந்தவன்.*

**என் மனைவி மரண தருவாயில் இருந்தபோது ஞாயிறு ஆராதனையை நடத்த வேறொருவரைத் தேடாமல், நானே ஆலயம் சென்று ஆராதனையை உற்சாகமாக நடத்தினேன். இதைக் கண்ட சபையார் விசுவாசத்தில் இன்னமும் பெலனடைந்தார்கள்!**

*இவ்வாறு என் காலத்தை, பலத்தை, வரத்தை, தேவ ராஜ்ஜியத்திற்காக நான் செலவிட்டு வந்தபடியால், யாதொரு சம்பாத்தியமும் இல்லாத இக்காலத்தில், 'எல்லாம் கூடக் கொடுக்கப்படும்' என்று அவர் சொன்ன வாக்குப்படியே எங்களுக்குத் தேவையானதைக் கொடுத்து தேவன் எங்களை ஆதரித்து வந்தார்! நான் என் மக்களிடமாவது, என் சிநேகிதர்களிடமாவது, இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளிடமாவது என் குறையைச் சொல்லி எனக்கு உதவி செய்யும்படி நேராகவோ ஜாடையாகவோ கேட்டவனல்ல. ஆண்டவர் தாமே, யார் யாரை எனக்கு உதவி செய்யும்படி ஏவினாரோ அவர்கள் தாங்களாகவே சந்தோஷமாய் அனுப்பிவந்தார்கள், அவ்வளவுதான்!*

*எதிர்பாராத பிரகாரம் தேவ மக்களிடமிருந்து சகாயம் வரும். அனுப்புகிறவர்கள் தங்கள் கடிதங்களில்: இந்தச் சிறு தொகையை நீங்கள் பெற்றுக்கொண்டு எங்களுக்காக ஜெபியுங்கள் என்று எழுதுவார்கள். பணம் கிடைத்தவுடனே, ஆண்டவருக்கு அதைக் காண்பித்து, அவரை ஸ்தோத்தரித்து, அவர்களுக்காக ஜெபித்து உடனே பதிலும் எழுதுவேன்.* **ஏராளமாக அல்ல, குறைவாகவும் அல்ல, எங்களுக்குத் தேவையான உதவி** *இந்த எட்டு வருஷக்காலமும் வந்து கொண்டேயிருக்கிறது. சொல்லப்போனால் நான் சம்பளம் வாங்கின காலத்தைவிட இப்பொழுது அதிக சமாதானத்தோடும் மனத் திருப்தியோடும் பிழைக்கும்படி ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார்! 'ஒன்றும் உங்களுக்குக் குறைவாயிருப்பதில்லை' என்று சொன்ன ஆண்டவரின் தவறாத வாக்குக்காக அவர் பாதம் பணிந்து*

வணங்குகிறேன். வேலையிலிருந்து நீங்கினது முதல், யாதொரு சம்பாத்தியம் இல்லாதிருந்தும், **ஒருவரிடமும் கடன் வாங்காமல்,** ஆண்டவர் எங்களைப் போஷித்துக் காப்பாற்றி வந்தார்! என்பதை அறிந்த அனேக பிரியமான தேவமக்கள் என்னைப் பார்த்து: "நீங்கள் உங்கள் ஊழிய நாட்களிலும் கர்த்தருடைய சாட்சியாக விளங்கினீர்கள். கர்த்தர் தமது பிள்ளைகளைப்போஷித்துக் காப்பாற்று கிறவர் என்பதற்கு இப்போதும் நீங்கள் சாட்சியாயிருக்கி றீர்கள்" என கூறினார்கள்! இப்போது வயது **86** ஆகிறது. தேவனுடைய பிள்ளைகள் அநேகருடைய நல்விருப்பத்தாலும் வேண்டுதலாலும், நான் இதுவரை பிழைத்திருந்து, என்னால் இயன்ற முழுமையும் தந்து ஊழியம் செய்து வருகிறேன். இன்னும் எவ்வளவு காலம் சரீரத்தில் பிழைத்திருக்க ஆண்டவர் சித்தங்கொண்டிருக்கிறாரோ நான் அறியேன்! ஒன்று நிச்சயம்: 'என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்' என்பதை சங்கீதக்காரனோடு சேர்ந்து சொல்லுகிறேன் (சங்.23:6). இந்த என் அனுபவ சாட்சியைப் படிக்கும் தேவ மக்கள் அனைவருக்கும், நான் பெற்ற அருமையான விசுவாசத்தையும், ஆசீரையும் ஆண்டவர் பரிபூரணமாய் தந்து ஆசீர்வதிப்பாராக!

– பரமானந்தம் ஐயர்

---

## 'மனுஷர் சாட்சியை விரும்பி' சத்தியம் பேச மறுப்பது தகுமோ?

என்னுடைய ஆசிரமத்தில், காலங்கள் செல்லச் செல்ல ஒருவித மனகிலேசம் எனக்கு ஏற்பட்டது. அது என்னவெனில் "நான் பிறருக்கு புத்தி சொல்வதுதான்!". ஆரம்ப பல வருடங்களில் என் புத்திமதிகளை கேட்க ஆசிரமத்து மக்கள் மகிழ்ச்சியோடு வருவார்கள். நான் அவர்களது குறைகளைக் கண்டித்து பேசுவதற்கு எவ்வித தயக்கமும் என்னிடம் நேரிட்டதில்லை. என் புத்திமதியை கேட்டவர்களும் "இந்த புத்திமதி என் மதியீனமான கண்களைத் திறந்து விட்டது" என மகிழ்ந்து கூறுவார்கள். இப்போதோ, எங்கள் ஆசிரமத்தில் அநேக ஆத்துமாக் களை தேவன் தந்துள்ளார். ஆனால், நான் அன்றுபோல் இன்றும் ஜனங் களின் குறைவுகளை சுட்டிக்காட்டி திருத்துவதற்கு மிகவும் தயங்குகிறேன்!

அது ஏனென்றால், "நான் மிகவும் அன்புள்ளவள்! கருணை நிறைந்தவள்! பாசம் மிகுந்த தாய் போன்றவள்!" என்றெல்லாம் ஜனங் களின் புகழ்ச்சி என்னை பாதிக்கத் தொடங்கியது.

**ஆசிரமத்து ஆத்துமா ஒருவரின் மீறுதல்களை 'உள்ளபடியே உரைத்து' புத்தி கூறினால் அவர்கள் என்மீது வைத்துள்ள 'அன்புள்ளம் கொண்டவள்'**

**என்ற சாட்சிக்கு பழுது ஏற்படுமோ என்ற அச்சம் எனக்குள் வந்து விட்டது!**

*காலப்போக்கில் 'மெய்யான நித்திய குணநலன்களை தள்ளி விட்டு' அவர்கள் என்மீது வைத்த 'அன்பின் கண்ணியம்'குறைந்து விடக்கூடாது என நான் விரும்பியதைக் கண்டு வெகுவாய் சஞ்சல மடைந்தேன். மற்றவர்கள் என்மீது கொண்ட சிறந்த அபிப்பிராயங்கள் சேதமடைந்தாலும், அல்லது பிறர் என்மீது கொண்ட சிநேகத்தை நான் இழந்து விடுவேன் என்பதற்காகவோ "உள்ளதை உள்ளபடி பேசு வதற்கு" நான் தயங்கினால் அல்லது சத்தியத்தைப் பேசுவதற்கு நான் பயப்பட்டால், அது மெய்யான அன்பு இல்லை என்பதை உணர்ந்தேன்.*

**கல்வாரி அன்பின் தியாகம், நித்திய மதிப்புடையதேயல்லாமல், அழிந்து போகும் இக்காலத்து மாய அன்பிற்கு உட்பட்டதல்ல, என்பதை நான் விளங்கிக் கொண்டேன்.**

*என் உள்ளத்தில் எழுந்த ஜெபமெல்லாம் "ஓ கர்த்தாவே, உமது கல்வாரி அன்பின் ஆழம் எத்தனை பெரியது! நான் அதை அறிய வேண்டிய பிரகாரமாய் இன்னும் அறியவில்லை!" என்ற கதறலாகவே இருந்தது.*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## கடைப்பிடித்த பின்பே போதிப்பேன்!

*சில வருடங்களுக்கு முன்பு வங்காள மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்தில், வேத நெறியில் வாழ்ந்த பக்தியுள்ள போதகர் ஒருவர் இருந்தார். ஒருசமயம், ஒரு தாய் தன் குழந்தையைக் கூட்டிக்கொண்டு அவரிடத்தில் வந்தாள். இவ்வாறு ஆலோசனை கேட்கும்படி, அநேகர் அவரிடம் வருவதுண்டு. இந்த தாய் ஆலோசனை கேட்டு, தன் குழந்தை அதிகமாக இனிப்புப் பதார்த்தங்களையே எப்போதும் வாங்கிச் சாப்பிடுகின்றது எனவும், அந்தக் கெட்ட பழக்கத்தைக் கைவிட தன் குழந்தைக்கு அந்த போதகர் போதனை சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டாள். அந்த போதகர், குழந்தையை அன்புடன் உற்று நோக்கினார். பின்பு, அந்த தாயைப் பார்த்து குழந்தையை* **மறுநாள்** *கூட்டிக் கொண்டு வரும்படியாகச் சொல்லி விட்டு அமைதியாய் இருந்து விட்டார்.*

*அவருடைய வார்த்தையின்படியே அந்தத் தாய், மறுநாள் குழந்தையைத் தன்னுடன் கூட்டி வந்தாள். அந்த நாளிலும், அவர் அந்தக் குழந்தையை ஒருமுறை அன்புடன் பார்த்துவிட்டு, தாயைப் பார்த்து* **அடுத்த நாள்** *குழந்தையை கூட்டிவரும்படி தயவாய் கூறி, திரும்பவும் அமைதியாய் இருந்துவிட்டார். இப்படியே சில தினங்கள் நடந்த பின்னர், ஒருநாள் அந்த போதகர் குழந்தையைப் பார்த்து*

“குழந்தாய், இனிமேல் நீ அதிகமாக இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடக் கூடாது. அப்படிச் சாப்பிட்டால், உன் வயிற்றில் கிருமிகள் உண்டாகி, உன் சரீரத்திற்கு கேடுண்டாகும்! நீயும் மிகவும் கஷ்டப் படுவாய்” என அன்புடன் கூறினார். குழந்தையும் அதற்கு முழு மனதுடன் இணங்கினது!

தனது மகனை அழைத்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்படும் சமயம், அந்தத் தாய், போதகரைப் பார்த்து, “அன்பார்ந்த ஐயா, இன்று நீங்கள் **குழந்தையிடம் சொன்ன போதனையை** முதல் நாளிலேயே சொல்லியிருக்கலாமே! இத்தனை நாளும் நான் வீணாக அலைந் திருக்கத் தேவையில்லையே!” என்று கேட்டாள். கொஞ்ச நேர மௌனத்திற்குப் பின்னர் அந்த பக்தியுள்ள போதகர் பேசத் தொடங்கி....

> *“தாயே, நீ சொல்லுவதில் தவறு எதுவுமில்லை. இந்த இடைப்பட்ட நாட்களில் எனக்குள் பெரியதொரு போர் நடந்தது. நடந்த அந்த போர் ‘என் மனதை நான் அடக்குவதாய்’ இருந்தது! போரில் ஜெயம் பெறுவதற்கு இத்தனை நாட்கள் ஆகிவிட்டது!! அந்தப் போர் என்னவெனில், உன் குழந்தையைப் போலவே நானும்கூட இது நாள் வரை, அதிகமான இனிப்புகளை விரும்பி சாப்பிட்டு வந்தேன். உனது குழந்தைக்கு இனிப்பு சாப்பிடக்கூடாது என்று* ***நான் போதனை சொல்வதற்கு முன்னர்,*** *என்னையே அந்தப் பழக்கத்தி லிருந்து விடுவித்துக் கொள்ள நான் போராடி வெற்றிகொள்ள வேண்டியது எனக்கு அவசியமாயிற்று. உன் குழந்தை இனி ஜென்மத்திற்கும் கண்டிப்பாய் அதிக இனிப்பு சாப்பிடாது!” என்று கூறிமுடித்தார் (அப்.1:2).*

*– வங்காளத்தின் கிராம போதகர்*

---

## ‘அக்கினி சூழலில்’ கெம்பீரிக்கும் ஜெயம்!

பேதுரு கூறும் புத்திமதியில் “உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமை என்று திகையாமல்.... அதனிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவோம்” என கூறினார் (1பேதுரு.4:12-16). நாம் தேவனை மகிமைப்படுத்த வேண்டிய முக்கியமான ஒரு இடம் “**நம் மத்தியில்**” எரிந்திடும் அக்கினியாகவே இருக்கிறது!

எத்தனையோ அக்கினியான சோதனைகளில், அக்கினிப் பிளம்பு தன் தாசர்களைத் தீண்டிட தேவன் அனுமதித்ததில்லை! இருப்பினும், அநேக சமயங்களில் அக்கினி அவர்களை கடுமையாய் தாக்கி யிருக்கிறது. ஆனால், இதுபோன்ற நேரத்தில்தான் நம்முடைய

*விசுவாசம் சோதிக்கப்படுகிறது. இந்த* **அக்கினி சூழ்நிலைகளை** *நம்மீது அனுமதித்த தேவனுடைய மிகுதியான தயவையும், அன்பையுமே நாம் போற்றி.... அந்த உறுதியான விசுவாசத்தைக் கொண்டு நாம் அவரை மகிமைப்படுத்திட வேண்டும்!*

*இதைவிட மேலாய், நாம் இதுவரை தேவனுக்கு புகழ்ச்சியாய் வாழ்ந்ததைவிட "பற்றியெறியும் இந்த அக்கினியில்" தேவனுடைய நாமம் மிக அதிகமாய் மகிமைப்படப் போகிறது என்பதை நாம் விசுவாசித்திருக்க வேண்டும்!*

***சில பற்றியெறியும் அக்கினிக்கு பெரிதான விசுவாசமே தேவைப்படுகிறது! குறைவான விசுவாசம் அங்கே தோற்றுப்போகும். ஆம், அக்கினி உளையில்தான் நமது ஜெயம் நிலைநாட்டப்பட வேண்டும்!***

*ஒரு மனிதன் தன் துன்ப நேரத்தில் விளங்கச் செய்திடும் பக்தி வைராக்கியத்தை, வேறு எதிலும் அவன் காட்டிட இயலாது! அக்கினி சூளைக்குள் போடப்பட்டவர்கள் கொஞ்சமும் பிசகு- நசலின்றி வெளியே வந்து விட்டார்களே! இதுவே பக்தனின் இரகசியம்! அவனுக்குள் ஒரே ஒரு மாற்றம்தான் நிகழ்ந்தது..... கையில் கட்டப்பட்டு உள்ளே போடப்பட்டார்கள்! வெளியே வரும்போது கட்டு அவிழ்ந்து வந்தார்கள்!! இப்படித்தான்அநேக சமயங்களில், அக்கினி சூளையில் தேவன் தன் மகத்துவத்தை விளங்க பண்ணுகிறார்:*

*அவர்கள் பக்கத்தில் சென்று பாருங்கள்.... அவர்கள் சரீரத்தில் காயத்தின் வடு சிறிதேனும் இல்லை! அவர்கள் உடம்பில் கொப்பளங்களும் இல்லை! அவர்கள் முடிகூட கருகவில்லை! அவர்கள் ஆடை பொசுங்கவுமில்லை! நெருப்பின் கருகல் வாசனை கூட அவர்கள் மீது வீசவில்லை! இவ்வாறுதான் எந்த ஒரு உத்தம கிறிஸ்தவனும் அக்கினி சூளையான உபத்திரவங்களைக் கடந்து வெளி வரவேண்டும். கட்டுகள்தான் அவிழ்ந்தன! ஆனால் நெருப்போ அவர்களைத் தொடமுடியவில்லை! இதுவே கிறிஸ்துவானவர் அடைந்த ஜெயத்திற்கு ஒப்பானதாகும்! ஆம், "அவைகளின் மேல் சிலுவையிலே அவர் வெற்றி சிறந்தார்!" என்பதே, அந்த ஜெய கெம்பீரம் (கொலோ.2:15) .*

*இதுவன்றோ மெய்யான ஜெயம்.... வியாதிப்பட்டாலும் அங்கேயும் ஒரு ஜெயம்! மரித்துக் கொண்டிருந்தாலோ அல்லது மரணமே அடைந்தாலோ அங்கேயும் ஒரு ஜெயம்! எதிரும் புதிருமான சூழ்நிலை மத்தியிலும்* **"ஒரு வல்லமை" உங்களுக்கு ஜெயம் தரும்** *என்பதை விசுவாசியுங்கள். நாம் சென்றடைய வேண்டிய வான் சிகரங்கள் காத்திருக்கின்றன. தேவனை மகிமைப்படுத்தும் அந்த*

*உச்சிக்கு சென்ற பின்பு, திரும்பிப் பாருங்கள்! அப்போது, நீங்கள் கடந்து வந்த பாதையைக் கண்டு வியப்படைந்து, ஜெயத்தின் பாடல்களை உங்கள் நாவு தானாகவே பாடிவிடும்!!*

*இந்த ஒப்பற்ற நிலையில், நம்மை காணும் மற்றவர்கள் "இவன் ஐசுவரியவான் என வியப்பார்கள்! ஆனால் உண்மையில் நாமோ, தரித்திர பாதையில் கடந்து வந்தவர்கள்..... அந்த தரித்திரத்தினால் மற்றவர்களை ஐசுவரியவான்களாய் மாற்றுகின்றவர்கள். இங்கேதான் நமது வெற்றியின் இரகசியம் புதைந்து கிடக்கிறது! தாழ்விடத்தில்தான் கிறிஸ்து ஜெயம் பெற்றார். மற்றவர்களுக்கு என்னவோ அது இழிவாய் இருக்கலாம்! ஆனால், கிறிஸ்துவைப் போல 'அதுவே' நமக்கும் ஜெயம்!*

*ஒரு மனுஷன் எண்ணற்ற உபத்திரவங்களைச் சுமந்து கொண்டு வந்தும் "அவன் இருதயத்தின் கிண்-கிணி மணி ஓசையை" ரீங்காரமாய் நாம் கேட்கும்போது, அந்த காட்சி நம் உள்ளத்தை கொள்ளை கொள்ளாதோ? சோதனை உச்சக் கட்டத்திற்குச் சென்ற ஒருவன், முற்றிலும் ஜெயம் பெற்றவனாய் திரும்ப வருவதைக் காண்பது, கண்கொள்ள காட்சியன்றோ! சூடு-பாலைவனத்தையும் ஊடுருவச் சென்ற ஒரு யாத்ரீகனின் உடல், சற்று துவண்டது போல் தோன்றி னாலும், உடைபடாத அவனது சகிப்புத் தன்மை நமக்குப் புத்துணர்வு ஊட்டுகிறது அன்றோ! ஆ, இந்த அதிசயங்கள் அவரது கிருபைக்கே நிலைத்திருக்கும் சாட்சியும், புகழ்ச்சியும் ஆகட்டும்!*

*இந்த மண்ணின் ஆதாரம் யாவும் இழந்தும்!*
*இரைச்சலான சமுத்திரம் போலவே ஆனாலும்!*
*இளைப்பாறுதல் அமைதி கொண்டவன் இவனென்று....*
*இறைவன் பாதுகாத்திடும் அதிசயம் இவனென்று....*
*இயேசுவுக்கு புகழ் சேர்க்கும் மாந்தரில், நானும் ஒருவன்தானோ?*

*– ஒளிதாசன்*

---

## நம் விசுவாச கப்பல் சேதமடையக் கூடாது!

*நம்முடைய கிறிஸ்தவ ஜீவியம் ஒரு கப்பல் பயணத்திற்கு ஒப்பாயிருக்கிறது. விசுவாசமாகிய அந்த கப்பல் பயணம், சேதமடையாமல் அக்கறை செல்ல* **நல்மனச்சாட்சியும், மாயமற்ற விசுவாசமும்** *கண்டிப்பாய் தேவை. இதை பவுல் வலியுறுத்தி "நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு!" என தீமோத்தேயு வுக்கு* **கட்டளையாக** *கொடுத்தார். இந்த விசுவாச கப்பற் பயணத்தில் நாம் எல்லோரும் இருக்கிறபடியால் "***இந்த கட்டளை** *நம் எல்லோருக்கும்*

*ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது" (1தீமோ.1:18). அநேக கிறிஸ்தவர்களின் விசுவாச கப்பல் சேதமடைந்ததற்கு காரணம், அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் நல்மனச்சாட்சியிலிருந்தும், தேவனை குறைசொல்லாத மாசற்ற விசுவாசத்திலிருந்தும் வழி விலகிச் சென்றதேயாகும்!*

**நாம் வாழும் இந்த கொடிய காலம் 'சாதாரண' காலமல்ல! பூச்சக்கரத்தையும் நம்மையும் தேவன் நேர்த்தியாய் ஆளுகை செய்கிறார் என்ற சத்தியத்தின் மீது 'குறைந்து வரும் விசுவாசத்திற்கு' எதிராக நாம் போராட வேண்டிய காலம்.**

*மனச்சோர்வும், பீதியும், கவலையும் பெருகிவரும் அவிசுவாசத் திற்கு எதிராக நாம் போராட வேண்டும். இக்கடைசி நாட்களில் 'சகலத்தையும் ஆளுகை செய்யும் கர்த்தர்' நல்லவர்! என்ற விசுவாசம் நமக்குள் வேரூன்றி இருக்க வேண்டும். கர்த்தரோ, நன்மையான ஈவுகளைத் தெரிந்தெடுத்தே நமக்குள் அவர் வழங்குகிறார். நம்மை ஆசீர்வதிக்க விரும்பும் அவரது முடிவான சிறந்த நோக்கமெல்லாம்* "**இயேசுவை போல் நாம் மாற வேண்டும்!**" *என்பதுதான்! இவ்வித அழைப்பை தேவன் 'நமக்கு எவ்வாறு தந்தார்?' என காண்பது ஆச்சரிய மாயிருக்கிறது! ஆம், "நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்து,* **தமது கிருபையினால்** *தேவன் என்னை அழைத்தார்!" என அறிவது எத்தனை மகிழ்ச்சியாயிருக்கிறது (கலா.1:15).*

*நல்ல மனச்சாட்சி என்பது, ஒரு தராசுக்கு ஒப்பாயிருக்கிறது. ஒரு தராசைப் போலவே, நம்முடைய மனச்சாட்சியும் உணர்வுள்ளதாயிருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், அது நல்ல எடை தராசாய் இருக்காது! தேவனுக்கும், தேவனுடைய வார்த்தைக்கும், பழு தொன்றும் ஏற்படாமல், இந்த* **நல்ல** *மனச்சாட்சி நமக்கு எப்போதும் இருக்க வேண்டும். நாட்கள் செல்லச் செல்ல இந்த நல்ல மனச்சாட்சி* "**நன்மை** *நிறைந்த மனச்சாட்சியாய்" மாறி, நன்மைக்கு விரோதமான யாதொன்றையும் அகற்றுவதற்கு உணர்வுள்ளதாயிருக்க வேண்டும்!*

**நன்மைக்கு விரோதமாய் ஒரு மில்லிகிராம் அளவிற்கு எடை குறைந்தாலும், அதை உடனே சரிசெய்யும் உணர்வை நாம் கொண்டிருக்க வேண்டும்.**

*இந்த நல்ல போராட்டம் நமக்குள் தொடர்ந்து நடைபெறும் போது, நன்மை செய்யும் மனச்சாட்சியிலிருந்து,* **கர்த்தரை பிரியப்படுத்தும் மனசாட்சியாய்** *நாம் வளர்ந்து மாற்றம் அடைகிறோம். இப்படி ஒரு தொடர்ச்சியான நல்ல போராட்டத்தில் "விசுவாசத்தையும் நல் மனச்சாட்சியையும்" பாதுகாத்து நடக்க, நாம் ஜாக்கிரதை கொண்டிருக்கும்போதுதான், நம்முடைய விசுவாச கப்பல் சேதமடை யாமல் அக்கறை சேர்ந்திட முடியும்!*

*– சந்தீப் பூணன்*

# பெட்சி டென் பூம்

## தேவ ஜனங்களை காக்க அர்ப்பணித்த டச்சு சகோதரி



(1885-1944)

நெதர்லேண்டில் 'ஆம்ஸ்டர் டாம்' நகரில், கஸ்பார் டென் பூம் குடும்பத்தில் மூத்த மகளாய் பிறந்தார். அந்த முழு குடும்பமும், உலக மகா யுத்தத்தில், நெதர்லேண்டை ஆக்கிரமித்த நாசிக் படையிலிருந்து யூதர்களை பாதுகாத்திட, குடும்பமாய் தங்கள் ஜீவனை அர்ப்பணித்தார்கள். 1844-ம் ஆண்டு வாரத்தில் ஒரு முறை கூடும் ஜெப குழுவை ஆரம்பித்து, அந்த வார ஜெபக்கூடுகை சுமார் 100 வருடங்கள் தொடர்ந்து நடந்தது!

சங்கீதம் 122:6-ல் கூறப்பட்ட : "எருசலேமின் சமாதானத்திற்காக வேண்டிக் கொள்ளுங்கள். என்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக" என்பதே அவர்களின் பாரமான ஜெபமாய் இருந்தது. இந்த வாக்குதத்தத்தை முன் வைத்து, யூத தேவ ஜனம் தங்கள் சொந்த பூமியான இஸ்ரவேலுக்கு திரும்ப வேண்டும் என ஜெபித்து, சர்வ வல்ல தேவனால் அது நிறைவேறிற்று. உலக மகா யுத்தம் வெடித்த அந்த நாட்களிலும் பெட்சி டென் பூம் அவள் சகோதரி ஹாரி டென் பூம் ஆகிய இருவரும் தடையில்லாமல் ஜெபித்து கொண்டே இருந்தார்கள்.

1942 மே மாதம் ஒரு யூத பெண்மணி, டென் பூம் குடும்பத்திற்கு அடைக்கலமாய் ஓடி வந்து, நாசிக் படையிலிருந்து காக்கும்படி வேண்டினார்கள். அதற்காகவே ஜெபித்து வந்த குடும்பத்தினர் பரவசத்தோடு அந்த பெண்ணிற்கு அடைக்கலம் தந்து, இன்னும் அநேக யூதர்களையும் சேர்த்துக்கொண்டு துணிவுடன் பாதுகாப்பு தந்தார்கள். 1944-ம் ஆண்டு டென் பூம் இல்லத்தில் யூதர்கள் பதுங்கி இருக்கிறார்கள் என சந்தேகித்து தீவிர நடவடிக்கை எடுத்தார்கள். கெஷ்டப் பூ என்ற போலீஸ் அதிகாரி திடீரென்று உள்ளே நுழைந்து அங்கிருந்த 30 யூதர்களை கைது செய்தார்கள். அதில் கஸ்பாரும், பெட்சி - ஹாரி டென் பூம் சகோதரிகளும் உள்ளடங்குவர்.

பெட்சி- ஹாரி டென் பூமை யூதர்களோடு சிறையில் அடைத்த அதிகாரி, கஸ்பார் பூமிடம் அவர் முதிர் வயதினிமித்தம் சலுகை காண்பித்து "உங்களை நான் விடுவிக்கிறேன்! இந்த சிறையில் நீங்கள் பிணமாவதைவிட உங்கள் வீட்டு கட்டிலில் மரிக்கலாம்" என அறிவித்தார். அதற்கு கஸ்பார் டென் பூமோ, தன் கண்களில் அக்கினி மயமாய் ஜொலிக்க அந்த நாசிக் அதிகாரியை பார்த்து **"இன்று நான் வீட்டிற்கு சென்றவுடன், நாளை ஒரு யூதர் அடைக்கலம் தேடி கதவை தட்டினால்.... தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனத்திற்கு அடைக்கலம் தந்து மரிப்பதையே என் பாக்கியமாக கருதுவேன்"** என வீரமாய் கூறினார். அதன்படியே கஸ்பார் டென் பூம் சிறையில் வீர மரணமடைந்தார். எங்களுடைய சிறைச்சாலை காவலாளி என் அக்காளிடம் கொடூரமாய் நடந்து மரிக்க நேர்ந்தபோது, **கர்த்தருடைய உயர்ந்த பணியை செய்து மரிக்கிறேன்** என்ற பிரகாசமான பொழிவுடன் சிறையில் மரித்தார். கொடிய சிறையிலிருந்து வெளியே வந்த பெட்சியின் தங்கை ஹாரி டென் பூம் "உன்னதமானவரின் இரகசிய மறைவிடம்" என்ற அற்புதமான புத்தகத்தை எழுதி பல்லாயிரம் மக்களை ஆசீர்வதித்தார்கள்.

- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்

## ஓ வாலிபனே, 'நித்தியத்தை முன்வைத்து' உன் ஓட்டம் இருப்பதாக!

**சா**வு, பிதாவின் வீட்டுக்கு நம்மை வரவேற்கும் அலங்கார நுழைவாயில்! ஆனால் கல்லறைக்குச் செல்லும் கிறிஸ்து அற்ற கிறிஸ்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் அதுபெரும் வேதனையும், வாதிக்கப்படுதலும் ஒழியாத அழிவின் வாசல் (மத்.22:13; மாற்கு 9:48; லூக்கா 16:24; 2 தெச.1:9; வெளி. 20:10).

கடவுளற்ற வாழ்வு வாழ்ந்துவிட்டு, நல்ல சாவை அடைவது என்பது கூடாத காரியமே! சாவுக்குப் பின் மனந்திரும்பும் சாத்தியக்கூறும் மனிதனுக்கு அளிக்கப் படவில்லை. மரித்தவர்களுக்கு ஞானப்பொழிவு கொடுத்தாலும்! மரித்தவர்களுக் காக உறவினர்கள் பாவ விமோசன காணிக்கை கொடுத்தாலும்! மீட்பு பெறுவதற் கான சாத்தியமில்லை என்பதே திருமறைப் போதனை. **ஆம், பிந்திய குற்ற உணர்வும், பிந்திய மனந்திரும்புதலும், பிதாவின் மடியை நமக்குத் தேடித் தராது.** எனவே, எதிர்பாராமல் எதிர்கொள்ளும் சாவை நீங்கள் சந்திக்க, எப்போதும் ஆயத்தமா? ஆயத்தமானவர்களுக்கு அது ஒரு மயிர்கூச்சரிக்கும் அற்புத நிகழ்வு! அதற்கு தயாராக நிற்பவர்களே ஞானவான்கள்! எனவே, இந்த நாள் என் வாழ்வின் இறுதி நாளாய் இருக்கக்கூடும்! என எண்ணியே வாழ்ந்திடக்கடவோம்!

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், கிறிஸ்துவுக்குள் மரிப்பவர்கள் அனுப விக்கும் உயிர்ப்புக்கு ஓர் திருஷ்டாந்தம்! அது ஒவ்வாத ஒரு வீண் கற்பனைச் செய்தி அல்லவே அல்ல! எனவே, உலகை ஆதாயம் செய்து, ஆத்துமாவை நஷ்டப்படுத்திக் கொள்ளாதிருப்போமாக. நித்தியத்தின் வாழ்வை முன் வைத்து நிகழ்காலத்தை சீரமைத்துக் கொள்வோமாக! இந்த நம்பிக்கை ஒருநாளும் வீண்போகாது. வாழ்வில் எதிர்கொள்ளும் எல்லாவித போராட்டத்திலும் வெற்றி காண, அவைகளைத் தாக்குப்பிடிக்கும் திறனை இந்த நம்பிக்கையே கூட்டி வழங்கும்! மாலைப்பொழுதில் பள்ளியை விட்டு வீடு திரும்ப ஆவலாய் காத்திருக்கும் பள்ளி சிறாரின் ஆசையைப் போன்ற எதிர்நோக்காகவே, பரிசுத்த வான்களின் மரணம் இருக்கும்! இந்த பாக்கியம் இரட்சிப்படைந்து, அந்த இரட்சிப்பை காத்துக் கொண்டவர்களுக்கு மாத்திரமே உண்டு!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்
Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.